JOIN & EARN
Earn More than
Rs. 30,000 Per Month
BANKING RELATED JOB
- FLEXIBLE WORKING TIMING
- NO INVESTMENT REQUIRED
- NO AGE LIMIT
- UNLIMITED INCOME POTENTIAL
- FREE TRAINING & SUPPORT
- PREFERENCE RETIRED PEOPLE
82483 86212

GST ROAD NEWS
Email:gstroadnews@gmail.com CHROMPET Weekly News Paper www.gstroadnews.com
Chrompet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar
Vol:13 Issue -11 22 June 2025 - 28 June 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902

INDIVIDUAL HOUSE FOR SALE
@CHROMEPET
NEMILICHERRY
OM SAKTHI NAGAR EX.
1500sqft LAND AREA

2 BHK
8056666010

PREMIUM FLATS FOR SALE
@CHROMEPET BHARATHIYAR St.
GANDHI NAGAR Nr.RLY. STATION
PATSON PARAGON
SCAN HERE
EACH FLOOR ONE FLAT
3BHK 1390 Sqft
LIFT TILL TERRACE | VIDEO DOOR PHONE | 24X7 CCTV ON PHONE
COVERED CAR PARING | RAIN WATER HARVESTING | AUTOMATIC WATER CONTROL
PATSON Construction forever...
99625 37799
www.patsonbuilders.com
Amala Annai Complex, No. 353, GST Road, Chrompet, Chennai - 600 044.

## நன்மங்கலம் ஏரிப் பகுதியில் ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு வழுங்குவதா? கோர்ட் கண்டனம்

தாம்பரம் அருகே நன் மங்கலம் ஏரிப் பகுதியில் ஆக்கிரமித்து கட்டப்பட்ட வீடுகளுக்கு குடிநீர் மற்றும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வந்தது. அப்போது நீதிபதிகள் ஆக்கிரமிப்பு பகுதியில் கட்டப் பட்ட வீடுகளுக்கு எப்படி இணைப்பு கொடுத்தீர்கள் என்று விளக்கம் தருமாறு அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். இதில் தாம்பரம் மாநகராட்சியையும் எதிர்மனுதாரராக சேர்க்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

WANTED
SITE ENGINEER
& DRIVER
FOR BUILDER OFFICE
5-YEAR EXPERIENCE
SRI DEVI BUILDER
95000 76091/ 96771 14444

3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School
3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged

MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004

SHRIMATHI DEVKUNVAR NANALAL BHATT VAISHNAV COLLEGE FOR WOMEN
57 YEARS
( AUTONOMOUS) CHROMPET,CHENNAI - 44
OWNED AND MANAGED BY CORK INDUSTRIES HARITIES TRUST
AFFILIATED TO UNIVERSITY OF MADRAS - RE- ACCREDITED WITH 'A+' GRADE BY NAAC CHROMPET - CHENNAI -600044
ADMISSION OPEN
HURRY ONLY FEW SEATS LEFT
AIDED PROGRAMMES
B.A. History and Tourism
B.A. Economics
B.A. English
B.Sc Mathematics
B.Sc. Statistics
B.Sc. Physics
B.Sc. Chemistry
B.Sc. Plant Biology & Plant Biotechnology
HOSTEL FACILITY AVAILABLE
"Educate a woman, Empower the world."
APPLY ONLINE THROUGH COLLEGE WEBSITE: www.sdnbvc.edu.in
WALK IN FOR FURTHER DETAILS TIMINGS: 10 AM TO 4 PM ( MON- SAT)
FOR U.G& P.G ADMISSION CONTACT: 9384843014 / 8939559651

PREMIUM FLATS FOR SALE @ CHROMPET
THIRUMALAINAGAR, Nr. Zion School
Natarajan Apartment
LINITH CASITA

2 BHK 980 Sqft
3 BHK 1240 Sqft
ONWORDS Rs.68 L ALL INCLUSIVE
☑ Lift ☑ CCP ☑ CCTV
☑ As Per Vasthu
GJ CONSTRUCTION
98409 41585

FLATS FOR SALE

@CHROMPET
POSTEL NAGAR
Nr 200 Ft ROAD
2 BHK - 3 UNIT
888 & 926 Sqft
CHROMPET@ HASTHINAPURAM
MARUTHI NAGAR
Nr. ANJANEYAR KOVIL

1 BHK - G1 612 Sqft
2 BHK - F1 1108 Sqft
CCTV/ CCP/ LIFT/ ASPER VAASTHU
KANCHEE CONS & KARTHIK BUILDERS
98843 52417 / 98840 15359

FLATS FOR SALE
@ CHROMPET
THIRUMALAI NAGAR
NISHAN APARTMENT

5th STREET
NR. ZION SCHOOL
2 BHK 960 Sqft
3 BHK 1200 Sqft
Lift/CCP/CCTV/ VIDEO DOOR PHONE
AS PER VASTHU / 24 HRS WATER
NISHAN CONSTRUCTION 98409 84126

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET
PADMANABHA NAGAR
(Near KARUMARI AMMAN TEMPLE)

NEW Projects
4BHK 1825 Sft
2BHK 941 & 898 Sft
Sankar Constructions
98416 59929 / 98416 59930
KRISHNA NAGAR
(Nr.Hasthinapuram Bus Stand)
SRE KRISHNAA

ONLY 1 FLAT AVAILABLE
3BHK 1287 Sq Ft
24 Hrs Power Backup*
Specification
AUTOMATIC LIFT
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER

# நீர்வண்ணன் பெருமாள் திருக்கோவில் திருநீர்மலை



108 திவ்யதேசங்களில் நான்கு திவ்யதேசங்களை தரிசித்த பலன் ஒருங்கே கிடைக்கும் ஒப்பற்ற திருத்தலம் இந்த திருத்தலம். திருமால் இத்தலத்தில் நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என நான்கு திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார்.

நான்கு கோலங்கள் :

நின்றான் நீர்வண்ணன் நின்ற திருக்கோலம்

இருந்தான் நரசிம்மர் அமர்ந்த திருக்கோலம்

கிடந்தான் அரங்கநாதன் சயனத் திருக்கோலம்

நடந்தான் திரிவிக்கிரமன் உலகளந்த திருக்கோலம்

திருமால் 108 திவ்யதேசங்களிலும் இந்த நான்கு திருக்கோலத்தில் மட்டுமே காட்சி கொடுக்கிறார். இத்தகு சிறப்பு வாய்ந்த காட்சியாக நான்கு மூர்த்திகளையும் ஒருங்கே காணக் கிடைப்பது புண்ணியம் நிறைந்த ஒன்றாகும்.

மலையடிவாரக் கோவில் நின்றான் :

மூலவர் : நீர்வண்ணன்

தாயார் : அணிமாமலர் மங்கை தாயார்

உற்சவர் : நீர்வண்ணன்

கோலம் :நின்ற திருக்கோலம்

திசை : கிழக்கு

மங்களாசாசனம் : பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார்

ஊர் : திருநீர்மலை, தோயாத்ரி.

மலைக்கோவில் கிடந்தான்:

மூலவர் : அரங்கநாதர் சுவாமி

தாயார் : அரங்கநாயகி தாயார்

கோலம் : சயனத் திருக்கோலம்

திசை : தெற்கு

நடந்தான் :

மூலவர் : திரிவிக்ரமன்

கோலம் : நடந்த திருக்கோலம்

திசை : கிழக்கு

இருந்தான் :

மூலவர் : சாந்த நரசிம்மர்

கோலம் :வீற்றிருந்த திருக்கோலம்

திசை : கிழக்கு

விமானம் : தோயகிரி விமானம்

தலவரலாறு :

"பூலோக வைகுண்டம்" என்று போற்றப்படும் திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதர் சுவாமியை தரிசிக்க எண்ணிய "பிருகு முனிவர்" மற்றும் "மார்க்கண்டேய முனிவர்" நீர் சூழ்ந்த இம்மலையின் மீது நீண்ட காலம் தவம் செய்தனர்.

அவர்களின் தவத்திற்கு மனமிறங்கிய திருமால் "போக சயனத்தில்" அருள்மிகு அரங்கநாதர் திருக்கோலத்தில் காட்சி தந்து அருளினார்.

நீர் சூழ்ந்த மலை என்பதால் இவ்விடம் "நீர்மலை" என்றும், திருமால் வந்து அவதரித்த மலை என்பதால் "திருநீர்மலை" என்றும் பெயர் பெற்றதாக தலவரலாறு கூறுகிறது.

பழங்காலத்தில் இவ்வூர் தோயாசம், காண்டவனம், மலை தோயாத்ரி சேத்திரம் என பல பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறது.

அரங்கநாதர் தரிசனம் :

அருள்மிகு அரங்கநாதர் சுவாமி மலை மீது தெற்கு முகம் நோக்கி கோவில் கொண்டு அருள்கிறார். அவர் காலடியில் ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோர் வீற்றிருக்கின்றனர். இவர்களை சேவித்த வண்ணம் பிருகு முனிவர் மற்றும் மார்க்கண்டேய முனிவர் ஆலய முகப்பில் இருக்கின்றனர்.

திருமகளான இலட்சுமி தாயார் "அருள்மிகு அரங்கநாயகி தாயார்" என்ற திருநாமத்தில் கிழக்கு நோக்கி தனிச் சன்னதி கொண்டு அருள்கிறார்.

சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இம்மலையின் மீதுள்ள பெருமாளை தரிசிக்க நாம் 200 படிகளைக் கடந்து செல்ல வேண்டும்.

அருள்மிகு சாந்த நரசிம்மர் :

இங்கு அருள்மிகு நரசிம்ம சுவாமி பால நரசிம்மராகக் காட்சி தந்து அருள்கிறார். அழகிய வடிவத்தில் வீற்றிருந்த கோலத்தில் (அமர்ந்த கோலத்தில்) கிழக்கு நோக்கி தனி சன்னிதியில் அருள்கின்றார்.

அருள்மிகு திரிவிக்கிரமன் :

அருள்மிகு திரிவிக்கிரமன் இடது காலை உயர்த்தி உலகத்தை அளக்கும் வாமன அவதாரத்தில் சேவை சாதிக்கிறார். அருள்மிகு திரிவிக்கிரமன் மிக கம்பீரமான தோற்றத்தில் கிழக்கு நோக்கியவாறு தனி சன்னதி கொண்டு அருள்கிறார்.

இவ்வடிவத்தை திருமங்கையாழ்வார் "நடந்தான்" என்று பாடுகிறார்.

அருள்மிகு நீர்வண்ணன் :

அருள்மிகு நீர்வண்ணப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் மலை அடிவாரத்தில் கிழக்கு நோக்கியவாறு தனிச் சன்னதி கொண்டு அருள்பாலிக்கிறார்.

பெரும்பாலான கோவில்களில் கொடிமரம், பலிபீடம், கோபுரம் மூன்றும் ஒரே நேர்கோட்டில் அமைந்திருக்கும்.

ஆனால் இங்கே கொடிமரமும், பலிபீடமும் இராஜகோபுரத்தை விட்டு சற்று விலகி தனியே அமையப் பெற்றுள்ளன. இராஜகோபுரத்திற்கு நேர் எதிரில் இராமபிரான் சன்னதி அமைந்துள்ளது.

அருள்மிகு நீர்வண்ணப் பெருமாள் உடன் உறையும் இலட்சுமி பிராட்டிக்கு "அணிமாமலர் மங்கை தாயார்" என்பது திருநாமம். கிழக்கு நோக்கியவாறு தனி சன்னதியில் அருள்கின்றாள்.

# ஆஞ்சநேயர் கண்டேன் சீதையை என இரு விரல் நீட்டிய நிலையில் இருக்கும் அபூர்வ தோற்றம்



ராமபிரான் வனவாசம் மேற்கொண்ட போது, அவர் பத்தினியான சீதையும் உடன் செல்கிறாள். அப்போது காட்டில் தனிமையில் இருந்த போது, ராவணனின் மாமன் மாரீசன், மான் உருவில் வந்து மாயம் செய்கிறான். மானை பிடித்து தருமாறு சீதை கேட்டபோது, ராமன் துரத்தி சென்ற நிலையில், சீதை கடத்தப்பட்டாள்.

ராமபிரான் தன் மனைவியை காணாமல் துயரப் படும் போது ராமனின் மோதிரத்துடன் ஆஞ்சநேயர் இலங்கைக்கு சென்று சீதை இருக்கும் இடத்தை தெரிந்து வந்த ஆஞ்சநேயர் கண்டேன் சீதையை என இரு விரல் நீட்டி காட்டிய இடம் என்பதால் அப்பகுதியினர் ஆஞ்சநேயருக்கு கோவில் அமைத்து வழிபட்டனர். இந்தியாவில் எந்தக் கோவிலிலும் இல்லாத வகையில் உற்சவரான ஆஞ்சநேயர் வலது கையை நீட்டி இரு விரல்களால் 'கண்டேன் சீதையை' என கூறிய நிலையில் அருள் பாலிப்பது இக்கோவிலின் தனி சிறப்பா கும். ஆஞ்சநேயரை வேண்டி ஒருபடி தயிர், நான்கு முழ புது வேஷ்டி ஆஞ்சநேயர் மேனியில் சார்த்தி வழிபாடு செய்தால் நினைத்த காரியம் கைகூடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இக்கோவிலுக்கு அருகாமையில் வடக்கே சிறப்பு மிக்க திருத்தலையாலங்காடு பாலாம்பிகா சமேத ம்ருத்யுஞ்ஜயேஸ்வரர் கோவிலும், ஆலங்குடி குரு பகவான், வலங்கைமான் மகா மாரியம்மன் கோவிலும் உள்ளன.

அமைவிடம்

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுகாவில், திருவாரூரில் இருந்து 18 கிமீ தொலைவில் உள்ள மஞ்சக்குடி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது சீனிவாச பெருமாள் கோவில். கண்டேன் சீதையை என கூறிய நிலையில் அருள் பாலிக்கும் ஆஞ்சநேயர்.

# இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடலில் அலைகள் கொந்தளிக்காதது ஏன்?



■ ஆடி அமாவாசையில் இராமேஸ்வர அக்னி தீர்த்த கடலில் நீராடுவது மிகுந்த பலனைத் தரும் என்கிறது புராணங்கள். ராவணன் சீதையை கவர்ந்து சென்று இலங்கையில் சிறை வைத்திருந்தான். ஸ்ரீராமன் வானரப் படையோடு இலங்கைக்குச் சென்று போரிட்டு சீதையை மீட்டு வந்தான். சில காலம் அன்னியன் வசம் சீதை இருந்ததால் ஊரார் அவளை தவறாய் பேசி விடக் கூடாதென, ராமபிரான் சீதையை தீக்குளிக்க ஆணையிட்டான். இதனால் அக்னி குண்டம் முன்பாக வந்து நின்ற சீதை, 'அக்னி தேவனே நான் உனக்குள் இறங்குகிறேன். நான் கற்பிழந்திருந்தால் என்னை பொசுக்கி விடு' என கூறியபடியே அக்னி குண்டத்திற்குள் இறங்கினாள்.

■ சீதையின் கற்பின் வெம்மை அக்னி தேவனை சுட்டெரித்தது. 'சீதை பரிசுத்தமானவள். இவளை சுட்டுப் பொசுக்க என்னால் இயலாது' எனக் கூறியபடியே சீதையை கையில் ஏந்தி ராமனிடம் ஒப்படைத்து விட்டு தனது வெம்மையை தீர்க்க, அருகிலிருந்த ராமேஸ்வரக் கடலில் குதித்தான் அக்னி தேவன்.

■ அக்னி தேவன் கடலுக்குள் இறங்கியதால் ராமேஸ்வரக் கடல் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்து, கடல் வாழ் உயிரினங்கள் துடித்தன. கடலரசன் அலறினான். சீதையை அனைவரும் தஞ்சமடைய, அக்னி தேவனின் சூட்டைத் தணித்து கடலரசனை சாந்தப்படுத்தி அனைத்து உயிரினங்களையும் சீதா தேவி காப்பாற்றினாள்.

■ தன்னை பணிந்து நின்ற அக்னி தேவனை ஆசிர்வதித்த சீதை, 'இன்றிலிருந்து இந்த தீர்த்தம் அக்னி தீர்த்தம் என்று உமது பெயரால் அழைக்கப்படும். மற்ற கடல்களைப் போல் சீற்றம் கொள்ளாமல் பூமா தேவியின் மகளான என்னைப்போல் சாந்தமாய் விளங்கும்' என கடலரசனுக்கும் அருளினாள்.

■ அதோடு, இந்த அக்னி தீர்த்தத்தில் நீராடுபவர்களின் பாவங்கள் போகும் எனவும் அருளினாள். அன்றிலிருந்து ராமேஸ்வர கடலில் அலைகள் அடிப்பதில்லை. அக்னி தீர்த்தம் என அழைக்கப்படும் புண்ணிய தீர்த்தத்தில் நீராடுபவர்களின் பாவங்கள் போக்கப்பட்டு புண்ணியம் கிடைக்கும்.

■ ராமேஸ்வரத்தில் உள்ள அக்னி தீர்த்தத்தில் மாதந்தோறும் வரும் அமாவாசைகளில் தர்ப்பணம் கொடுக்கவும் முன்னோர்களுக்கு திதி கொடுக்கவும் ஏராளமானோர் இங்கு வருகை தருகிறார்கள். அதுபோல் தை அமாவாசை, ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை, மஹாளய பட்ச நாட்களில் கூட இங்கு கூட்டம் அலைமோதும். திதி கொடுத்துவிட்டு கடலில் குளித்துவிட்டு பிறகு அறைக்கு சென்று அங்கும் குளித்துவிட்டு கோயிலுக்குச் செல்லலாம். ஈரத் துணியுடன் கோயிலுக்குள் அனுமதி இல்லை என்பதால் 22 கிணறுகளில் குளித்தாலும் ஈரத்துடன் கோயிலுக்குள் அனுமதி இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

■ ராமேஸ்வரம் மண்ணை மிதிப்பதே பெரும் பாக்கியம் என்கிறார்கள். வட இந்தியாவை சேர்ந்தவர்கள் முதலில் காசியிலும் பிறகு ராமேஸ்வரத்திலும் திதி கொடுக்க வேண் டும். அதுபோல் தென்னிந்தியர்கள் முதலில் ராமேஸ்வரத்திலும் பிறகு காசியிலும் திதி கொடுத்தால் மிகவும் புண்ணியம். இதனால் பித்ரு தோஷங்கள் விலகி, நன்மை கிடைக்கும். அத்துடன் திருமணமாகாதவர்களுக்கு சில பரிகாரங்களைச் செய்கிறார்கள். அதுபோல் பெண் சாபம் குடும்பத்தில் இருந்தால் அந்த வீட்டில் நல்லதே நடக்காது. அந்த தோஷத்திற்கும் இங்கு பூஜை செய்து நிவர்த்தி செய்கிறார்கள்.


# CLASSIFIEDS

## RENTAL

NEW COMMERCIAL SPACE FOR RENT
@CHITLAPAKKAM
1500 sq.ft 2nd FLOOR
"GODOWN SPACE
GROUND FLOOR 1000 SQ.FT."
9043641379 / 9176682911

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2BHK
PURE VEG
8072230451

## FLAT RESALE

FLAT FOR RESALE
@ANAGAPUTHUR
LAKSHMI NAGAR
914 - Sqft UDS 417- Sqft
2-BHK CCP, 30 LAKHS
9952685537

FLAT FOR RESALE
@HASTHINAPURAM
JAIN NAGAR
3 BHK - 1155 Sqft
UDS - 495 Sqft CCP
8072230451

FLAT FOR RESALE
@ EAST TAMBARAM
RAJESHWARI NAGAR
(OPP : MAHINDRA MM MOTORS)
2BHK-885 SQFT
UDS-570 SQFT
1FLOOR / CAR PARKING / LIFT
Rs-39 LAKHS ONLY
7871770199

FLAT FOR RESALE
@ CHROMPET
OPP SARAVANA STORES AREA
MANTHIRI NAVARATHNA
2BHK-755 Sqft
UDS 323 Sqft 4TH FLOOR
GATED COMMUNITY
2 CAR PARKING,48L
9500196316

FLAT FOR RESALE
@ CHROMPET
@Raghava Nagar
2 BHK - 800 Sqft
UDS - 300 Sqft,
@MARUTHI NAGAR
3 BHK - 1888 Sqft
UDS - 880 Sqft
80722 30451

FLAT FOR RESALE
@NEHRU NAGAR
2 BHK - 650 Sqft
UDS - 327 Sqft
SEMI INDEPENDENT DUPLEX HOUSE
@PURUSHOTHAMAN NAGAR
1640 Sqft UDS -875 Sqft
80722 30451

## PLOT SALE

PLOT FOR SALE
@ GUDUVANCHERY
NELLIKUPPAM ROAD
MELAIYUR VILLAGE
1721 Sqft
UNAPPROVED PLOT
7639547081

PLOT FOR SALE
Nr.SANATORIUM RLY STATION
1250 SQFT
RS. 8500-PER SQFT (NEGO)
9840036137

PRIME LOCATION
RESIDENTIAL / COMMERCIAL LAND
@CHROMPET NEW COLONY
NR RELA/ BALAJI HOSPITAL
2640 Sqft EAST FACING
2SIDES 30 Ft ROAD
EAST AND WEST 4.8C
9884173831

PLOT FOR SALE
@ SOMANGALAM VILLAGE
GAYATHRI DOCTOR'S NEST
NEAR DHANALAXMI
ENGINEERING COLLEGE
PER Sqft RS 1300/-
99406 51659

## APARTMENT SALE

APARTMENT FOR SALE
@ CHROMEPET
Nr. MITbridge, Patel road
1546 Sqft
VEG only
9940610277

## INDEPENDENT HOUSE

INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ MUDICHUR
MAHALAKSHMI NAGAR
3BHK 1500 Sft
EAST FACING / 24 HOURS WATER
RS. 48 LAKHS
9940016739

## BUILDING CONTRACT



INCLUDING OHT & SEPTIC TANK
ELEVATION WORK
ARCHITECTURAL DESIGN
ENGINEER SUPERVISION
BRANDED MATERIALS
8072499969

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 2224 0607 / 89395 26999

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

# ஆக்கிரமிப்புகளை அகற்றிய தாம்பரம் மாநகராட்சி



தாம்பரம் மாநகராட்சிகுட்பட்ட சண்முகம் சாலை, முத்துரங்கன் சாலை உள்ளிட்ட மார்கெட் பகுதியில் பொதுமக்கள் நடக்கமுடியாத நிலையில் கடைகள், விளம்பர போர்டுகள், எல்.ஈ.டி திரை மற்றும் கேட்பாரற்று கிடக்கும் வேன்களால் ஆக்கிரமிக்கப்பட்டு உள்ளது. இது பற்றி தாம்பரம் மாநகராட்சிக்கு புகார் வந்த நிலையில் நகரமைப்பு அதிகாரிகள் காவல் துறையினர் உதவியுடன் சண்முகம் சாலை, முத்துரங்கன் சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றினர். விளம்பர போர்டுகளை இடித்து அகற்றினார்கள், இதனால் மார்கெட் பகுதி முழுவதும் பரபரப்பாக காணப்பட்டது,

# நித்தியானந்தா இருக்கும் நாடு

பிரபல சாமியார் நித்தியானந்தா வழக்குகள் தொடர்பாக வெளிநாட்டுக்கு தப்பி ஓடினார் பின்னர் கைலாச " என்ற நாட்டை ஒரு தீவில் அமைத்ததாக செய்தி வெளியானது. அங்கிருந்து கொண்டு அவர் பக்தர்களுக்கு ஆசி வழங்கி வருகிறார். இந்த நிலையில் மதுரை ஆதீனம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தது .மதுரை உயர்நீதிமன்ற கிளையில் விசாரணை நடைபெறும் போது நித்தியானந்தா எங்கே இருக்கிறார் என்று நீதிபதி கேட்டதற்கு அவரது சிஷ்யை அர்ச்சனா என்பவர் ஆஜராகி விளக்கினார். ஆஸ்திரேலியாவில் கைலாச நாடு இருப்பதாகவும் .இதனை ஐநா சபை அங்கீகரித்திருப்பதாகவும் தெரிவித்தார். இதனை நீதிபதிகள் ஏற்றுக் கொண்டனர்

# அறுபடை வீடு கண்காட்சிக்கு மக்கள் படையெடுப்பு



மதுரை பாண்டி கோயில் அருகே உள்ள அம்மா திடலில் (ஜூன் 22) முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுகிறது. இதையொட்டி மாநாட்டு வளாகத்தில் முருகனின் அறுபடை வீடுகளின் மாதிரி கோயில்கள் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோயில்களில் முருகனின் அறுபடை வீடுகளில் பூஜை செய்யப்பட்ட வேல்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. தினமும் காலை, மாலையில் 2 மணி நேரம் பூஜைகள் செய்து பக்தர்களுக்கு பிரசாதமும் வழங்கப் படுகிறது.

மதுரையில் ஒரே இடத்தில் அமைக்கப் பட்டுள்ள அறுபடை வீடுகளை தரிசிக்க தமிழகம் முழுவதும் இருந்து முருக பக்தர்கள், சக்தி வார வழிபாட்டு மன்றத்தினர், ஐயப்ப பக்தர்கள் சங்கத்தினர், சாய்பாபா பக்தர்கள், ஆன்மிகவாதிகள் என பல்வேறு பக்தி குழுக்களை சேர்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் குடும்பம் குடும்பமாக குவிந்து வருகின்றனர்.

FREE SPOKEN HINDI CLASS
On 28th JUNE'25
For Students & Adults Register@
MPR HINDI STUDY CENTRE
Chrompet, Chennai
98418 19519 / 8754519519

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 30 TO 75, SSLC AND ABOVE
Work Form Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

WANTED
@ CHROMPET
SUPERVISOR - MALE
+2/ANY DEGREE
COMPUTER KNOWLEDGE
AGE BELOW 25
91718 09600
98416 54214

WANTED
DTP OPERATOR
Experience: 1 year
Coreldraw
Indesign
Photoshop
Good Salary
Timings: 10 Am to 6.30 Pm
Mail Your Resume
gstroadnews@gmail.com
89395 26999

WANTED
●MRKG:- EXECUTIVE /MANAGER
●TELECALLERS ( F/M)
(FRESHERS & EXPERIENCE :50NOS)
SALARY 30K TO 50K
LUNCH & BUS PASS PROVIDED
E.SURESH VICE-CHAIRMAN
96000 16651

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA
NEED SENIOR CITIZENS,RETIRED BANKERS, HOME MAKERS,BUSINESS PEOPLE
WANTED FINANCIAL ADVISORS
GROW YOUR INCOME WITH LIC OF INDIA
(OPPORTUNITY FOR ALL)
STIPEND -Rs.7000 PER MONTH
NO AGE LIMIT
FOR REGISTRATION:
CONTACT: M. AASHIKA
DEVELOPMENT OFFICER LIC OF INDIA
96770 14565
94443 06688

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street, Hasthinapuram, Chennai - 600 064.


PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

# இருசக்கர வாகனங்களுடன் 2 ஹெல்மெட் வழங்க உத்தரவு.

வரும் ஜனவரி முதல் புதிய இருசக்கர வாகனங்களுடன் 2 ஹெல்மெட் வழங்க ஒன்றிய அரசு உத்தரவு பிறப்பித்து உள்ளது

அனைத்து இருசக்கர வாகனங்களிலும் ABS எனப்படும் Anti-lock Braking System பொருத்த வேண்டும்

தற்போது 40% வாகனங்களில் ABS பொருத்தப்படவில்லை என ஒன்றிய சாலை போக்குவரத்து.. துறை கூறி உள்ளது.

# வெண்பூசணிச்சாற்றின் பயன்கள்



அரை கப் வெண் பூசணிச் சாற்றுடன் அரை கப் தண்ணீர் கலந்து தினமும் காலையில் பருகி வர கிடைக்கும் நன்மைகள்:

1. சோம்பலை நீக்கி புத்துணர்வை கொடுக்கும்.

2.மாதவிடாய் பிரச்சனைகளை கட்டுப்படுத்தும்.

3.வெள்ளைப்படுதலை கட்டுப்படுத்தும்.

4.உடல் உஷ்ணத்தை குறைக்கும்.

5.உடல் எடையை கட்டுப் படுத்துவதுடன் எடை அதிகரிப்பினால் ஏற்படும் கால் மூட்டுவலியைக் குறைக்கும்.

6. உடலில் அமிலத் தன்மையை சமன்படுத்த பெரிதும் உதவுகிறது.

7 .வெண்பூசணிச் சாற்றுடன் சம அளவு தண்ணீர் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு மூன்று மணி நேரத்திற்கு வேறு எதுவும் சாப் பிடாமல் இருப்பது வயிற்றுப் புண்ணுக்குச் சிறந்த மருந்தென்றும் தொடர்ந்து பல நாட்கள் சாப்பிட வயிற்றுப் புண் முழுமையாகக் குணமாகிவிடுமென்றும் குறிப்பிடுகின்றனர்.

8.மலச்சிக்கல் குறையும். குறிப்பாக நாடாப் புழுக்களுடன் இதரக் குடற் புழுக்களை வெளியேற்றும்.

9. கலோரி குறைந்த உணவென்பதால் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்த உணவு எனப்படுகிறது. கழிவு நீக்கியாகச் செயலாற்றி சிறுநீர் வெளியேற்ற உதவுகிறது.

10. தூக்கமின்மைக்கும் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

# நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும் வெள்ளை பட்டாணி சுண்டல்



பச்சை அல்லது வெள்ளை பட்டாணி ஒரு கப், இஞ்சி, பச்சை மிளகாய் அரைத்த விழுது, கடுகு ஒரு தேக்கரண்டி,கறிவேப்பிலை ஒரு கொத்து,பெருங்காயப்பொடி ஒரு சிட்டிகை உப்பு தேவைக்கேற்ப மாங்காய் (பொடியாக நறுக்கினது) 2 மேசைக்கரண்டி

செய்முறை: பச்சை பட்டாணியை குறிப்பில் உள்ள முறையில் ஊற வைத்து எடுத்து, ப்ரஷர் பானில் ஒரு விசில் வரை வேக வைத்து, வடித்து எடுத்துக் கொள்ளவும். பயறில் இஞ்சி பச்சை மிளகாய் விழுதைச் சிறிது நேரம் பிசறி வைக்கவும்.

வாணலியில் தாளிக்க எண்ணெய் விட்டு, கடுகு, பெருங்காயப் பொடி போட்டுத் தாளித்து, பிசறி வைத்திருக்கும் பயறையும், உப்பையும் போட்டு கிளறி இறக்கவும். இறக்கினவுடன் மாங்காயையும், கொத்தமல்லியையும் சேர்த்துக் கலக்கவும்.

கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு முதலியவற்றைத் தவிர மற்ற பயறுகள் அனைத்தையும், ஒரு கப் பயறுக்கு அரை தேக்கரண்டி சமையல் சோடா என்ற அளவில் போட்டு குறைந்தது 10 மணி நேரம் ஊற வைக்கவும். வேக வைப்பதற்கு முன்பு, நன்கு சோடா போகக் கழுவி விட்டு, பயறு மூழ்கும் அளவிற்கு தண்ணீர் விட்டு ப்ரஷர் குக்கரில் வேகவிடவும்.

ஒரு அங்குல இஞ்சித்துண்டு, 4 பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்து விழுதாக அரைத்து வெந்த பயற்றில் சிறிது நேரம் பிசறி வைத்து விட்டுத் தாளித்துக் கிளறினால், வாயு உபத்திரவம் இருக்காது. ருசியாகவும் இருக்கும்.

# சுவிஸ் வங்கியில் இந்தியர்கள் பதுக்கும் பணம் 3 மடங்காக அதிகரிப்பு

அரசியல்வாதிகள், நடிகர்கள், நடிகைகள், தொழிலதிபர்கள், கோடீஸ்வர்கள் என பல தரப்பினரும் சுவிஸ் வங்கிகளில் பெரும் பணத்தை போட்டு வைக்கின்றனர்.

சுவிஸ் தேசிய வங்கி வெளியிட்ட ஆண்டறிக்கையில், கடந்த ஆண்டு இந்தியர்கள் சுவிஸ் வங்கிகளில் முதலீடு செய்த பணம் 3 மடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது. அதாவது, கடந்த 2024ம் ஆண்டு 3.5 பில்லியன் பிராங்க் (சுவிஸ் கரன்சி) அளவுக்கு இந்தியர்கள் சுவிஸ் வங்கிகளில் முதலீடு செய்துள்ளனர். இது இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.37,600 கோடியாகும். கடந்த 2021ம் ஆண்டுக்குப் பிறகு இந்தியர்கள் செய்துள்ள அதிகபட்ச முதலீடாகும்.

# கிச்சன் டிப்ஸ்



மோர் புளித்து விட்டால் குக்கர் அல்லது கனமான பாத்திரத்தில் சிறிது எண்ணெய் விட்டு மிளகாய் வற்றல், உளுந்து, கடலைப்பருப்பு, கடுகு தாளித்து, திட்டமான உப்பு, பெருங்காயம், மஞ்சள் தூள், 5 ஆழாக்கு மோர், 2 ஆழாக்கு அரிசி சேர்த்து அப்படியே வேக விட வேண்டும். எலுமிச்சை சாதம் போல ருசியாக இருக்கும். காரக்குழம்பு மீதியானதும் அதை அப்படியே சுட வைத்து கொடுக்காமல் கடாயில் 1 கரண்டி எண்ணெய் விட்டு காய்ந்ததும் குழம்பைக் கொட்டி கொதிக்க வைத்து இறக்கி விடுங்கள். புது குழம்பு சமைத்தது போல இருக்கும்

# நாவல் பழத்தின் நன்மைகள்



நாவல் பழங்கள், விதை, இலை மற்றும் மரப் பட்டைகளும் பல்வேறு ஆரோக்கிய பிரச்னைகளுக்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. நாவல் பழத்தில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, விட்டமின் B போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளன. இதனால் நாவல் மரத்தின் பழம், இலை, மரப்பட்டை மற்றும் விதை என அனைத்துமே மருத்துவ குணங்கள் வாய்ந்தவையாக உள்ளது.

★ நாவல் பழத்தின் விதையை பொடி செய்து, அதனை நீரில் கலந்து குடிக்கலாம். இல்லா விட்டால், நாவல் பழத்தினை ஜூஸ் போட்டு குடித்து வரலாம். இது நீரிழிவு பிரச்னை உள்ளவர்களுக்கு நல்லது.

★ நாவல் பழங்களை சாப்பிட்டு வந்தால், கல்லீரல் பிரச்னைகள் நீங்குவதுடன், சிறுநீர்ப்பை பிரச்னைகளில் இருந்தும் நிவாரணம் கிடைக்கும்.

★ ஈறுகள் மற்றும் பற்களில் பிரச்னை உள்ளவர்கள், நாவல் பழத்தினை உட்கொண்டால் நல்ல தீர்வு கிடைக்கும். நாவல் பழத்தின் இலையை பொடி செய்து, அதனைக் கொண்டு பற்களை துலக்கி வந்தால், ஈறுகள் மற்றும் பற்கள் ஆரோக்கியமாகவும், பளிச்சென்றும் இருக்கும்.

★ வயிற்றுப்போக்கினால் அவஸ்தைப்படுபவர்கள், நாவல் பழத்தினை ஜூஸ் போட்டு, அதில் சிறிது கல் உப்பு சேர்த்து கலந்து குடிக்கலாம்.

★ நாவல் பழத்தின் இலைகள் மற்றும் மரப் பட்டைகள் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுடன் வைக்கும். அதனை நீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடிக்க வேண்டும்.

★ சிறுநீரகக் கற்களால் கஷ்டப்படுபவர்கள், நாவல் பழத்தினை சாப்பிடுவதுடன், அதன் விதையை உலர வைத்து பொடி செய்து, தயிருடன் சேர்த்து சாப்பிட்டால் கற்கள் கரைந்து போகும்.

★ நாவல் பழங்களை சாப்பிட்டு வந்தால், அவை சருமத்தில் ஏற்படும் வெண் புள்ளி நோய்களுக்கு சிறந்த நிவாரணம் தரும்.

★அசிடிட்டி பிரச்சனைகள் உள்ளவர்கள், நாவல் பழத்தில் ப்ளாக் சால்ட் மற்றும் சீரகப் பொடி சேர்த்து சாப்பிடலாம்.

★ தமனிகளில் ஏற்படும் பிரச்னைகளை குறைத்து, மாரடைப்பை தடுக்கும்.

# நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க நாம் சாப்பிட வேண்டிய உணவுகள் என்ன தெரியுமா?



தினமும் உடற்பயிற்சி செய்வது,பச்சைக்காய்கறிகள், கீரைகள், பழங்கள் என அனைத்திலும் உடலுக்கு தேவையான சத்துக்கள் இருக்கின்றன. குறிப்பாக வைட்டமின் சி நிறைந்த பழங்கள் எடுத்துக்கொண்டால் உடலுக்கு தேவையான நோய் எதிர்ப்பு சக்தி கிடைத்துவிடும். கொய்யாப்பழத்தில் வைட்டமின் சி, வைட்டமின் பி, கால்சியம் சத்து, மெக்னீஷியம், பாஸ்பரஸ் ஆகிய சத்துக்கள் உள்ளது. இது உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைவழங்குகிறது.மேலும் எலும்புகளை வலுவாக்க உதவுகிறது. இதனை அதிகம் எடுத்துக்கொள்ள கூடாது. ஒரு நாளைக்கு ஒரு பழம் மட்டும் சாப்பிடலாம். ஆரஞ்சு பழத்தில் வைட்டமின் சி. இ, இரும்புசத்து, கால்சியம், பொட்டாசியம் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளது. இதனை பழமாகவும் பழச்சாறாகவும் அருந்தலாம். ஆரஞ்சு பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் நோய் எதிர்ப்பு சக்தியின் வீரியத்தை அதிகரிக்க செய்யும். மேலும் இது உடலுக்கு பல நன்மைகளை தரும். ஆப்பிள் பழத்தில் உள்ள சத்துக்கள் உடலுக்கு வலிமையை தரும். நுரையீரலுக்கு செல்லும் இரத்த ஓட்டத்தை சீராக்கும். உடலுக்கு தேவையான வைட்டமின்கள் அனைத்தும் ஆப்பிள் பழத்தில் அதிகளவு கிடைக்கிறது. ஆப்பிளைவிட நெல்லிக்காயில் அதிக அளவு சத்துக்கள் நிறைந்துள்ளது. நெல்லிக்காயில் உள்ள வைட்டமின் சி உடலுக்கு தேவையான நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குகிறது. இதனை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். நெல்லிக்காய் சாற்றுடன் எலுமிச்சை அல்லது இஞ்சி சேர்த்தும் குடிக்கலாம். எலுமிச்சை பழத்தில் பல மருத்துவ குணங்கள் நிறைந்திருப்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. இதில் உள்ள சிட்ரிக் அமிலம் மற்றும் வைட்டமின் சி உடல் சோர்வை தடுக்கும். அடிக்கடி எலுமிச்சை சாறு அருந்தி வந்தால் தாகம் அடங்கும். உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தரும்.

# மூத்த குடிமக்களுக்கு இலவச பஸ் பயண டோக்கன்




மாநகர பேருந்துகளில் சென்னைவாழ்மூத்தகுடிமக்கள் கட்டணமின்றி பயணிக்க இன்று முதல் டோக்கன் வழங்கப்படும். இன்று முதல் ஜூலை 31 வரை காலை 8.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை 40 மையங்களில் டோக்கன்கள் தரப்படுகிறது.ஜூலை முதல் டிசம்பர் வரை மாதத்திற்கு 10 டோக்கன்கள் வீதம் 6 மாதங்களுக்கானது வழங்கப்படும்.40 மையங்களில் அடையாள அட்டைகள் புதுப்பித்தல் மற்றும் புதியபயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.இருப்பிடச் சான்று, வயது சான்று, 2 புகைப் படங்களுடன் வர வேண்டும் என மாநகர் போக்குவரத்து கழகம். அறிவித்து உள்ளது.

# ஏகப்பட்ட மருத்துவப் பயன்கள் அடங்கியுள்ள கரிசலாங்கண்ணி



கரிசலாங்கண்ணியில் ஏகப்பட்ட மருத்துவப் பயன்கள் அடங்கியுள்ளன. நம் வீட்டுத் தோட்டத்தில் இருக்கும் ஒரு அற்புத மூலிகைதான் கரிசலாங்கண்ணி. வெண்கரிசாலை அல்லது கையாந்தகரை என்பது ஒரு மருத்துவ மூலிகை மற்றும் கீரை செடியாகும். கரிசலாங்கண்ணியில் இரண்டு வகைகள் உள்ளன. அவை மஞ்சள் கரிசலாங்கண்ணி, வெள்ளை கரிசலாங்கண்ணி ஆகும்.

மஞ்சள் நிற பூக்கள் இருந்தால் மஞ்சள் கரிசலாங்கண்ணி என்றும், வெள்ளை நிற பூக்களை வெள்ளை கரிசலாங்கண்ணி என்றும் அழைக்கப்படுகிறது. கரிசலாங்கண்ணியில் ஏகப்பட்ட மருத்துவப் பயன்கள் அடங்கியுள்ளன.

இரத்தத்தில் இரும்புச்சத்து குறைந்தால் இரத்தத்தில் உள்ள நீர்மத்தன்மை குறையும். இதனால் இரத்தம் தண்ணீர் போல அல்லாமல் சிறிது கெட்டியாக பசைத் தன்மை அடைகிறது. இதனால் இரத்தம் இரத்த நாளங்களில் எளிதாக செல்லாமல் ஆங்காங்கு படிந்து இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுகிறது. இரத்தத்தை சுத்தப்படுத்தி இரத்தத்தில் பழையபடி நீர்த்தன்மையை உண்டாக்குவற்கு கரிசலாங்கண்ணி கீரையை சூப் செய்து குடித்து வரலாம்.

கரிசலாங்கண்ணி மிகச் சிறந்த கிருமிநாசினியாகும். இது அழுகும் நிலையில் உள்ள புண்கள், வெட்டுக் காயங்கள் ஏற்பட்ட இடங்களில் இதன் இலையை அரைத்து சாறு பூசினாலும், புண்கள் மேல் வைத்துக் கட்டு போட்டாலும் புண்களை மிக விரைவில் ஆற்றிவிடும்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு வெள்ளை, வெட்டை நோய் ஏற்பட்டால், கரிசலாங்கண்ணி சாறு தான் அந்த நோயில் குணமாவதற்கு முதன்மையான மருந்து. மேலும் புற்றுநோய் செல்களை வளர விடாமல் தடுக்கும் வல்லமை பெற்றது கரிசலாங்கண்ணி.

உடலில் உள்ள தொப்பையைக் குறைக்க தினமும் கரிசலாங்கண்ணி இலை, தும்பை இலை, கீழாநெல்லி இலை சேர்த்து கஷாயம் போல செய்து குடித்து வரலாம். இதன்மூலம் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரைந்து தொப்பை குறையும். கரிசலாங்கண்ணி கீரை இதய அடைப்பை நீக்கி இதயத்தை சீராக செயல்பட வைக்கும்.

மேலும் மண்ணீரல், மற்றும் சிறுநீரகத்தைப் பலமாக்கும். மஞ்சள் காமாலை, சிறுநீர் எரிச்சல் ஆகிய அனைத்திற்கும் கரிசலாங்கண்ணி சிறந்த மருந்தாகும். ஆரம்ப நிலையில் உள்ள மனநோய்க்கு கரிசலாங்கண்ணி கீரை தான் மிக சிறந்த மருந்தாக விளங்குகிறது.

# குரோம்பேட்டையில் கைவிடப்பட்ட வைஷ்ணவா காலேஜ் ரயில்வே பாலம்




குரோம்பேட்டையில் 19 ஆண்டுகளாக ராதா நகர் சுரங்கப்பாதை பணி நடந்து வருகிறது. இதற்கிடையே வைஷ்ணவா காலேஜ் ரயில்வே கேட் பகுதியில் சுரங்கப்பாதை அமைக்க கோரிக்கை விடப்பட்டது. ஆனால் இது பற்றி தகவல் அறியும் சட்டத்தில் கேட்டபோது சுரங்கப்பாதை அமைக்க போதிய நிலம் இல்லாததால் அந்த திட்டம் கைவிடப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

குரோம்பேட்டை மக்கள் விழிப்புணர்வு சங்கத் தலைவர் சந்தானம் நெடுஞ்சாலைத்துறைக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வைஷ்ணவ கல்லூரி ரயில்வே கேட் சுரங்கபாதை குறித்து கேள்வி கேட்டிருந்தார். அதற்கு நெடுஞ்சாலைதுறை அதிகாரிகள் அளித்த பதிலில், “வைஷ்ணவ கல்லூரி ரெயில்வே கேட் பகுதியில் சுரங்கப்பாலம் அமைக்க போதிய நிலம் இல்லை என்பதால் அந்த திட்டம் கைவிடப்பட்டது. இது தொடர்பாக அடுத்த கட்ட திட்டங்கள் குறித்து ரயில்வே துறையுடன் ஆலோசித்து இறுதி முடிவு எடுக்கப்படும்“ என நெடுஞ்சாலைத்துறையினர் தெரிவித்தனர்.

# ஏர் இந்தியா கை மாறுமா?




ஏர் இந்தியா விமான டிக்கெட் முன்பதிவு சர்வதேச மற்றும் உள்நாட்டு வழித்தடங்களில் சுமார் 20% குறைந்துள்ளன. கடந்த வாரம் நடந்த அகமதாபாத் விமான விபத்துக்கு பிறகு ஏர் இந்தியா விமான முன்பதிவு குறைந்துள்ளது.

இந்த நிலையில் ஏர் இந்தியா நிறுவனத்தை அதானி நிறுவனம் வாங்க போவதாக வதந்தி பரவி வருகிறது.

# யோகா நிகழ்ச்சியில் 51 தண்டால் எடுத்த கவர்னர்



கவர்னர் ஆர் என் ரவி இன்று மதுரை வந்தார். சர்வதேச யோகா தினத்தை ஒட்டி நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார் அப்போது அவர் மாணவர்களுக்கு யோகாசனம் செய்து காண்பித்தார். இந்த நிகழ்ச்சியின் போது 73 வயதான அவர் 51 தண்டால் எடுத்து அசத்தினார்

# தாம்பரம் மேம்பாலத்தில் மின்கம்பம் விழுந்து டெலிவரி ஊழியர் படுகாயம்.



தாம்பரம் மேம்பாலத்தில் இருந்த மின் விளக்கு கம்பம் சாய்ந்து ஜி.எஸ்.டி சாலையில் விழுந்தது. இதில் இருசக்கர வாகனத்தில் சாலையை கடக்க காத்து இருந்த தனியார் உணவு டெலிவரி ஊழியர் சூர்யா(23) தலையில் காயம் அடைந்தார் அவருக்கு தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை தந்து மேல் சிகிச்சைகாக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

இரவு பலத்த காற்றுடன் மழை பெய்தபோது மின் விளக்கு கம்பம் சாய்துள்ளது,

சூர்யாவுக்கு திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது,

மாநகராட்சி அதிகாரிகள் இதுபோன்ற மின்கம்பங்களை சீர்படுத்த வாகன ஓட்டிகள் கோரிக்கை விடுத்தனர்.

# ஏர் இந்தியா விமானம் மீது பறவை மோதியதால் பரபரப்பு



அகமதாபாத்தில் இருந்து ஏர் இந்தியா விமானம் நடுவானில் பறந்து கொண்டு இருந்தபோது, விமானத்தின் மீது பறவை மோதியது. எனினும் விமானம் புனேயில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. பின்னர் நடந்த சோதனை யில் விமானத்தின் மீது பறவை மோதியது உறுதி செய்யப்பட்டது. அதிர்ஷ்டவசமாக விபத்து நேராததால் பயணிகள் உயிர் தப்பினர். இந்த சம்பவத்தை அடுத்து புனேயில் இருந்து டெல்லி திரும்ப வேண்டிய அந்த ஏர் இந்தியா விமானம் ரத்து செய்யப்பட்டது.

இதுகுறித்து ஏர் இந்தியா நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “புனே சென்ற விமானத்தின் மீது பறவை மோதியது கண்டறியப்பட்டதால், டெல்லி வர வேண்டிய சேவை ரத்துசெய்யப்பட்டது.இதனால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. விமான டிக்கெட்டை ரத்து செய்த பயணிகளுக்கு கட்டண தொகை திரும்ப அளிக்கப்பட்டது.

# முகச்சுருக்கத்தை நீக்க எளிமையான சில குறிப்புகள் !!



சந்தனப்பவுடருடன் பன்னீர், கிளிசரின் சேர்த்து பேஸ்ட் போல் குழைத்து முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் ஒரு இரு முறை செய்துவர முகச் சுருக்கம் நீங்கும்.புள்ளிவாழைப்பழத்தை பிசைந்து அதனுடன் பயத்தம் மாவு போன்றவற்றை கலந்து முகத்தில் தேய்க்க முகம் பொலிவு பெறும். பப்பாளிப் பழத்தை நன்றாக அரைத்து அத்துடன் சில துளிகள் பால் மற்றும் பாதாம் எண்ணெய் சேர்த்து முகத்தில் பூசலாம். ஒரு கிண்ணத்தில் 1/2 டீஸ்பூன் சந்தனப் பவுடர், 1 டீஸ்பூன் வெள்ளரிக்காய் சாறு அல்லது பேஸ்ட் மற்றும் 1/2 டீஸ்பூன் ஆலிவ் ஆயில் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி சில நிமிடங்கள் ஊறவைக்க வேண்டும். பின் சாதாரண நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இந்த மாஸ்க்கைவாரத்திற்கு 2 முறை பயன்படுத்த நல்ல பலன் கிடைக்கும்.ஆரஞ்சு தோலை நன்றாக காயவைத்து அதை அரைத்து மாவாக்கி பேஸ்ட் போல் பயன்படுத்தலாம் இவ்வாறு செய்தால் முகம் சுருக்கம் நீங்கும் முக பொலிவும் பெறும்.சந்தனப் பவுடரை பால் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின், கழுவ வேண்டும். இதனால் முகத்தில் உள்ள அழுக்குகள் வெளியேற்றப்பட்டு, முகம் பொலிவோடு இருக்கும். கற்றாழை ஜெல்லில் 1 டேபிள் ஸ்பூன் சந்தனப் பொடியை சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். பின் முகத்தில்தடவிஉலரவைத்துக் கழுவவேண்டும். இதனால் வெயிலால் பாதிக்கப்பட்ட சருமம் குணமாகும்.சந்தனப் பவுடர் மற்றும் மஞ்சள் தூளை ஒன்றாக கலந்து, அதை பால் அல்லது தயிர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி காய வைத்து கழுவ, முகம் பிரகாசமாக இருக்கும்.ஓட்ஸ் மாவுடன் சந்தனப் பவுடர் மற்றும் பால் கலந்தோ அல்லது வெள்ள விதையை நன்றாக அரைத்து அத்துடன் பன்னீர் கலந்தோ முகத்தில் பூச சுருக்கம் மறையும்.




Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725